# அவசர கூட்டப்பொருட்கள்

1. ஊரின் சுகாதாரத்தை பேணுவது உள்ளாட்சி அமைப்பின் கடமையாகும். தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் துப்புரவு பணியாளர்கள் பதவி உள்ளது. இதில் பெரும்பாலும் பட்டியல் இன மக்கள் துப்புரவு பணியாளர்களாக பணியாற்றி வருகின்றனர். இந்த பணியிடம் பல ஆண்டுகளாகவே தொடரப்பட்டு வருகிறது. உள்ளாட்சி துறைகளில் பணியாற்றும் பிற பணியிடங்களுக்கு என கல்வி தகுதிகள் பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் இச்சுகாதார பணியிடத்திற்கு மட்டும் கல்வி தகுதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. காரணம் இந்த பணிக்கு யாரும் விரும்பி வராத நிலை இருந்தது தான். எனவே சுகாதாரப் பணி இடத்திற்கு முன்பெல்லாம் நேரிடையாகவே நியமனம் செய்யப்பட்டும் அரசு மருத்துவரின் சான்று பெற்று அவர்களின் வயதை நிர்ணயிக்கப்பட்டு வந்தது.

"சுத்தம் சோறு போடும்" என்பர். துப்புரவு பணியாளர்கள் தெருக்களை சுத்தம் செய்தல், சாலைகளை சுத்தம் செய்தல், கழிவு நீர் ஓடைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை முகம் சுளிக்காமல் செய்து வருகின்றனர். இறந்த அடையாளம் தெரியாத அனாதை பிணங்களை எடுத்து சென்று அதை அடக்கம் செய்து தொற்று நோய் பரவாமல் தடுக்கின்றனர். மற்றவர்கள் செய்ய விரும்பாத தொழிலை இவர்கள் பொது நலன் கருதி அர்ப்பணிப்புடன் செய்து வருகின்றனர். ஆரம்பத்தில் இவர்கள் ஊதியம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு குறைவானதாகவே இருந்து வந்தது. அதன்பின் அது படிப்படியாக உயர்வு பெற்று தற்போது அடிப்படை ஊழியர்கள் போல் ஊதிய விகிதத்தில் பணியாற்றி வருகின்றனர். மற்றவர்கள் செய்ய வெறுக்கும் பணியினை முழு மனதுடன் செய்து வரும் இப்பணியாளர்களுக்கென்று உரிய மதிப்பை பிறர் கொடுப்பதில்லை. இது மிகவும் வருந்தத்தக்கதாகும். சுகாதார பணியினை செய்பவர்கள் குடும்பம் தற்போது தான் கல்வி கற்கவும், உயர் பதவியில் அமருவதும் நடந்து வருகிறது. இது நலிந்து கிடக்கும்

சமுதாயம் முன்னேறவும் மற்றவர்களை போல் இவர்களும் சமூகத்தில் அந்தஸ்து பெறவும் உதவி வருகிறது. பிற்காலத்தில் “சாதி இரண்டொழிய வேறில்லை” என்ற ஔவையின் கூற்றுக்கு நல்ல விடிவு காலம் ஏற்பட வாய்ப்புள்ளது.

நோய் நொடிகள் வராமல் தடுக்கும் முகமாக சுகாதார பணிகளை நல்லமுறையில் முகம் கோணாமல் முழு மனதுடன் செய்து வரும் சுகாதாரப்பணியாளர்கள் தற்போது சங்கம் அமைத்து தங்கள் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி உரிமைகளை பெற்று வருகின்றனர். இந்த வகையில் நாகர்கோவில் மாநகராட்சியில் பணியாற்றி வரும் துப்புரவு பணியாளர்கள் “துப்புரவு பணியாளர் சங்கம்” என்பதிலிருந்து “மாநகர துய்மை பணியாளர் சங்கம், நாகர்கோவில்” என்ற பெயரில் 12.10.2019ல் நாகர்கோவில் மாநகர ஆணையாளரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் தலைவர் தமது 15.10.2019 ம் தேதிய மனுவில் மாநகர ஆணையரிடம் ஒரு கோரிக்கை மனு அளித்துள்ளார். அதில் “துப்புரவு பணியாளர் என்ற பணியிடத்தை “தூய்மை பணியாளர்” என மாற்றம் செய்ய கோரியுள்ளார்.

அரசு அலுவலகங்கள் மற்றும் வெளியிலும் பல பழைய பெயர்கள் மாற்றப்பட்டு புதிய பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. “ஊனமுற்றோர்” என்பதை மாற்றி “மாற்று திறனாளி” எனவும், “வரிதண்டலர்” என்ற பெயர் மாற்றம் செய்து “துப்புரவு பணி மேற்பார்வையாளர்” என்றும், “மகப்பேறு உதவியாளர்” “நகர்நல செவிலியர்” (Urban Health Nurse) என்றும் ஏற்கனவே பெயர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது நலிவுற்ற நிலையில் இருந்து படிப்படியாக முன்னேறி வரும் துப்புரவுப் பணியாளர்கள் தங்களது பதவி பெயரான “துப்புரவு பணியாளர்” என்பதை “தூய்மை பணியாளர்” என அழைக்க கோரிக்கை விடுத்துள்ளனர். தூய்மை இந்தியா திட்டத்தில் நவீன அணுகுமுறையில் பல்வேறு சுகாதார பணிகள் நடைபெற்று வருகின்ற இவ்வேளையில், சுகாதாரப்பணி செய்து வருகின்ற இப்பணியாளர்களை

துய்மை பணியாளர்கள் என அழைப்பதே சிறந்ததாகும். இதன் மூலம் சமுதாயத்தில் அவர்களது மதிப்பு உயரும்.

“நிலம் உயர நீர் உயரும், நீர் உயர பயிர் உயரும், பயிர் உயர நாடு உயரும்” என்ற வாக்குக்கு ஏற்ப, கீழ்நிலை பணியாளர்களின் நிலை உயர நாடு உயரும். எனவே “துப்புரவு பணியாளர்” என்ற பெயர் “தூய்மை பணியாளர்” என மாற்றம் செய்து ஆணை பிறப்பிக்க அரசை கேட்டு கொள்ளலாம்.

அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.5482/2017/எச்3

**தீர்மானம் எண். 446- அங்கீகரிக்கப்பட்டது.**

2. தமிழ்நாடு அரசாணை எண் 82-ன் படி சுற்று சூழல் மற்றும் வனம் (சுக-2) EC-2 நாள்.25.06.2018 தமிழ்நாட்டினை பிளாஸ்டிக் மாசில்லாத மாநிலமாக மாற்றும் நோக்கத்துடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 01.01.2019-ன் படி 14 வகையான ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை தடை செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சி பகுதிகளிலிருந்து 14 வகையான ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மாநகராட்சி பகுதிகளில் 11 துாண் உரக்குடில்களில் தற்போது 6 உரக்குடில்களில் செயல்பாட்டில் உள்ளது. அதில் தடை செய்யப்பட்ட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் 100% முழுமையாக இல்லை என்ற விவரம் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.5482/2017/எச்3

**தீர்மானம் எண். 447- அங்கீகரிக்கப்பட்டது.**